**National Workshop on Application of Financial Econometrics held on 10-15 November, 2013 at Bharathidasan University, Trichy**
**Organiser: Dr. M. SELVAM**

**Dinamalar, Tiruchirappalli Edition,**
**Dated; 11.11.2013, Page No:12**

# 'பொருளாதார கணித புள்ளியியலை ஊரக பகுதிகளுக்கு கொண்டு செல்லணும்'

திருச்சி, நவ. 11-

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக வணிகவியல் மற்றும் நிதி கல்வியியல் துறை சார்பில் நிதி கணித புள்ளியியல் பயன்பாடு என்ற தலைப்பிலான தேசிய பயிலரங்க தொடக்க விழா நேற்று நடந்தது.

வணிகவியல் மற்றும் நிதி கல்வியியல் துறைத்தலைவர் செல்வம் தலைமை வகித்து பேசுகையில், இந்திய நிறுவனங்கள் பன்னாட்டு நிறுவனங்களின் வரவால் பல சவால்களை எதிர்கொள்கிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய அதிக லாபம் ஈட்ட வேண்டிய சூழ்நிலையில் இந்திய நிறுவனங்கள் உள்ளன. ஒவ்வொரு பிரச்னைகளுக்கும் மிகச்சிறந்த முடிவுகள் எடுப்பதை பொறுத்தே இந்த நிறுவனங்களின் வெற்றி உள்ளது. பொருளாதார கணித புள்ளியியல் அத்தகைய சிறந்த முடிவுகளை எடுக்க உறுதுணை புரிகின்றன. ஆசிரியர்களுக்கு புள்ளியியல் கருவிகளில் பயிற்சி வழங்குவதற்கு இக்கருத்தரங்கம் உதவி செய்யும் என்றார்.

திருச்சி ஐஐஎம் நிறுவன பேராசிரியர் கோபால் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில், தற்போதுள்ள கல்வி அமைப்பு அடிப்படை விஷயங்களை சரிவர கற்பிக்கவில்லை. மேலும் உற்று ஆராயும் மனப்பான்மை அனைவரிடமும் குறைந்து வருகிறது. வணிகவியல் பட்டதாரிகளுக்கு, வணிக வாய்ப்புகளை முன்கூட்டியே அறிய பொருளாதார கணித புள்ளியியல் உதவுகிறது. பொருளாதார கணித புள்ளியியல் துறை நிதியியல் சிக்கல்களை புள்ளியியல் நுணுக்கங்களையும், பொருளாதார கொள்கைகளையும் பயன்படுத்தி தீர்க்க உதவுகிறது.

ஆராய்ச்சியாளர்கள் பொருத்தமான புள்ளியியல் கருவிகளையும், தொழில் நுட்பங்களையும் பயன்படுத்த வேண்டும் என்றார்.

பரோடா எம்.எஸ். பல்கலைக்கழக பேராசிரியர் சண்முகன் பேசுகையில், பொருளாதார கணித புள்ளியியலை ஊரக பகுதிகளுக்கு கொண்டு செல்ல வேண்டும். விவசாயிகள் விதைக்கும் போதே பொருளின் விலையை அறிந்து கொள்ள உதவுவதுதான் இந்திய பொருளாதார கணித புள்ளியியல் கழகத்தின் நோக்கமாகும் என்றார்.

பாரதிதாசன் பல்கலைக்கழக பொருளியல் பேராசிரியர் அய்யம்பிள்ளை வாழ்த்தி பேசினார். சென்னை பொருளியல் பள்ளி இயக்குனர் சண்முகம், புதுச்சேரி பல்கலைக்கழக பேராசிரியர் ராமச்சந்திரன், பரோடா எம்.எஸ். பல்கலைக்கழக பேராசிரியர் ராவ் ஆகியோர் நிதி கணித புள்ளியியல் கருவிகளில் பயிற்சி வழங்கினர்.

நிகழ்ச்சியில் நாடு முழுவதும் இருந்து ஆராய்ச்சி மாணவர்களும், பேராசிரியர்களும் கலந்து கொண்டனர். பயிலரங்க அமைப்பு செயலாளர் பாபு, துறை உதவி பேராசிரியர்கள் வனிதா மற்றும் காயத்ரி ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக வணிகவியல் மற்றும் நிதி கல்வியியல் துறை சார்பில்,நிதி கணித புள்ளியியல் பயன்பாடு என்ற தலைப்பிலான தேசிய பயிலரங்க தொடக்க விழாவில் கையேட்டை திருச்சி ஐஐஎம் நிறுவன பேராசிரியர் கோபால் வெளியிட்டார். அருகில் வணிகவியல் மற்றும் நிதி கல்வியியல் துறைத்தலைவர் செல்வம், பரோடா எம்.எஸ். பல்கலைக்கழக பேராசிரியர் சண்முகன், பேராசிரியர் அய்யம்பிள்ளை.